செய்தி வெளியீடு எண் :587 நாள்: 12.04.2022

# செய்தி வெளியீடு

**ஒன்றிய அரசின் ஊராட்சி அமைச்சகத்தால் புதுதில்லியில் மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் திரு.எம். வெங்கய்யா நாயுடு அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட "சுதந்திர தின அமுதப் பெருவிழா " நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.**

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி இதனை "சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழாவாக" நாடெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இப்பெருவிழாவின் ஒரு பகுதியாக ஒன்றிய ஊராட்சித் துறை அமைச்சகம் புதுதில்லியில் இந்நிகழ்வினை அடையாள வாரமாக (ICONIC WEEK) ஏப்ரல் மாதம் 11 முதல் ஏப்ரல் 17 வரை கொண்டாடி வருகிறது. இந்நிகழ்ச்சியை மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் திரு.எம். வெங்கய்யா நாயுடு அவர்கள் துவங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியின் முதல்நாள் நிகழ்வாக ஏப்ரல் 11ஆம் நாளன்று மாண்புமிகு ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுடன் இந்தியாவின் அனைத்து மாநில ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்கள், அனைத்து மாநில ஊரக வளர்ச்சித் துறை செயலர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழகத்தின் சார்பில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திருமதி பி.அமுதா இ.ஆ.ப. அவர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாட்டின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் உரையாற்றிடும் போது நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) ஊராட்சிகள் அளவில் அமல்படுத்திட, ஒருங்கிணைந்த நீடித்த வளர்ச்சியை எட்டிட எடுக்கவேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார்கள். ஊராட்சித் துறை 9 முக்கிய ஆய்வுக் கருப்பொருட்களாக வாழ்வாதாரம் நிறைந்த வறுமையற்ற கிராமம் ஏற்படுத்துதல், நோயற்ற ஊராட்சி, குழந்தைகள் நேய ஊராட்சி, நீர் நிறைந்த ஊராட்சி, பசுமை ஊராட்சி, அடிப்படை வசதிகள் தன்னிறைவு பெற்ற ஊராட்சி, சமூக பாதுகாப்பு நிறைந்த ஊராட்சி, சிறந்த ஆளுமை கொண்ட ஊராட்சி மற்றும் பாலின சமத்துவம் கொண்ட ஊராட்சி ஆகிய தலைப்புகளில் பல்வேறு ஊராட்சிகளில் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதனையும், அவ்வாறு மேற்கொள்ளும் போது மற்ற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக தமிழகம் விளங்கும் வகையில் "திராவிட மாடல்" வளர்ச்சியை எட்டிடும் என்கிற உறுதிமொழியை அளித்தார்கள்.

தமிழகத்தினைப் பொருத்த வரையில் சுமார் 80 ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in